## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

## தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்வு, ஜனவரி –2026

## NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME EXAMINATION (NMMS) JANUARY- 2026

### செய்திக் குறிப்பு

2025–2026-ம் கல்வியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் எட்டாம் வகுப்பு மாணவர்கள், **2026 ஜனவரி மாதம் 10 –ஆம் தேதி (சனிக்கிழமை)** அன்று நடைபெறவுள்ள தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் திட்டத் தேர்விற்கு **(NMMS)** விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகை எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. உதவித் தொகை வழங்க மாணவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு **NMMS** தேர்வு அனைத்து வட்டார அளவில் (Block Level) தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு **10.01.2026 (சனிக்கிழமை)** அன்று நடைபெறவுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் **Online** கட்டணத் தொகை ரூ.50/– சேர்த்து, தாம் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் சமர்ப்பிக்க வேண்டிய **கடைசி நாள் 20 .12.2025.** தற்போது, மாணவர்களின் நலன் கருதி அதிக மாணவர்கள் பயன்பெறும் இத்தேர்விற்கான விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கான **கால அவசாசம் 23.12.2025 மாலை 5.00 மணி வரை** நீட்டிக்கப்பட்டுள்ளது

மேலும், www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் கூடுதல் விவரங்களை அறியலாம்.

ஒம்/–
இயக்குநர்

**நாள். 19.12.2025.**

**இடம். சென்னை–6.**